உ

முருகன் துணை.

திருப்போரூர்

ஆண்டவன் பேரில்

கீர்த்தனை.

இஃது
மேற்படிதேவஸ்தானம்
தருமகர்த்தரவர்கள்
சிதம்பரசுவாமிகள்
ஆதீனம்—௯-வது
பட்டத்துத்தலைவராகிய

முத்துக்குமாரசுவாமிகளால்

இயற்றி
புரசை - அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரால்

பார்வையிட்டு
கடப்பூர் - சுரோத்திரியதார்
அப்பாசாமிமுதலியாரவர்களும்
வேதகிரிமுதலியாரவர்களும்
கேட்டுக்கொண்டபடி
புங்கத்தூர்

ம-சபாபதிமுதலியாரது
கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

விபவ௵ மாசி௴. 1869.

உ

முருகன் றுணை.

திருப்போரூர்கீர்த்தனை.

௧-இராகம்-செஞ்சுட்டி-தாளம்-ரூபகம்.

(பல்லவி.)

கண்டுகொண்டேனே-முருகனைக்-கலந்துகொண்டேனே*

(அநுபல்லவி.)

அண்டர்புகழ்திருப்... ... ...போரிநகருறை
அத்தனைச்சித்தனைச்... ...சுத்தனைக்கர்த்தனைச். கண்டு*

(சரணங்கள்.)

அச்சமகன்றேனே............ ......அவனைநான்
இச்சித்துநின்றேனே......................*
நச்சரவம்புனை... .... நாயகர்க்கோதிய
நாதனைவேதனைப்............போதனைநீதனைக். கண்டு*

பந்தமகன்றேனே...... ... .அவனரு
டாவந்தெரிந்தேனே............ ....*
கந்தமலர்க்குழல் .... வள்ளிகைப்பற்றிய
கையனைத்துய்யனை........மெய்யனைஐயனைச். கண்டு*

வேதனையற்றேனே... ... .அவன்பதம்
மேவிடப்பெற்றேனே... ... .*
வாதனையேசெய்த.......... ......வஞ்சகச்சூரற்கு
வாதியைநீதியை.........ஆதியைச்சோதியைக். கண்டு*

௨-இராகம்-காப்பி-தாளம்-சாப்பு.

(பல்லவி.)

என்னடிபெண்ணே-முருகனை-இணங்கடிகண்ணே*

(அநுபல்லவி.)

இன்னம்வர்மமாக............இருந்துவெறுப்பதும்
என்குருநாதனுக்,...... ...இசையாதிருப்பதும். என்ன*

(சரணங்கள்.)

அரிபிரமாதி............ ... .பறியொணு
ஆனந்தசோதி........................*
கரியுரிதரித்தவர்க்.......... ...கருளியதைநீயோதி
பிரியமாயவளைப்,..,......பிடியாதிருந்தநீதி. என்ன*

சின்மயவகம்............... ....சிறந்திடுஞ்
சிற்சுகபோகம்.........................*
தன்மயமாயதில் ... .தயங்காதிருந்தசோகம்
தடையில்லாமலதைத்-தழுவாதுன்றன்விவேகம்.என்ன*

முத்தியிதுதான்..........................கலந்திட்ட
மோகமுமிதுதான்....... ... .*
சுத்தநிர்க்குணமான....... ...சுயசோதியுமிதுதான்
தோகையேயதையின்னம்-தோயாதிருந்ததுதான்.என்ன

ரு-இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

(பல்லவி.)

சொல்லச்சொல்லச்சும்மா-என்னைத்தானேநிதம்
சோதித்தாலென்செய்குவேன்சுவாமி ......*

(அநுபல்லவி.)

அல்லும்பகலுமென்னை ... ... அலையாமலேநேமி
அறிவுக்கறிவாய்நின்ற...........ஆறுமுகசாமி. சொல்ல*

(சரணங்கள்.)

அத்திமுகனுக்குப் ... ...பின்னாகப்பிறந்தோனே
அன்பருளமகலா... ......இன்பமாகியதேனே
சத்துச்சித்தானந்தத் ......தன்மைமிகுங்கோனே
சம்ரசமெனக்கருள்...சரவணத்துதித்தோனே. சொல்*

தேனுந்தினைமாவுக்குந்... ....தேடித்திரிந்தபாதா
செல்வக்குறமகளைத்... ... தேற்றிமானந்தநீதா
வானுலகத்தவர்கள் ... வாழ்த்திவணங்கும்போதா
வஞ்சகமகற்றிட........வந்தருள்குருநாதா. சொல்*

பத்தனாக்கையேற்றும் ......பரமாகியவள்ளமே
பாவமுறுபவர்கள்... ...பகரொணுக்கள்ளமே
முத்திநாயெனுமோன ... ...முடிவானவுள்ளமே
முனிவரிறைஞ்சும்போரூர் - முருகனெனும்வெள்ளமே.
சொல்ல*

———— ————

௪-இராகம்-எமுனா-தாளம்-சாப்பு.

(பல்லவி.)

நீரங்கொடேஐயனே-இனியாகிலுந்-திருவருள்புரிமெய்யனே ...*

(அநுபல்லவி.)

நீரங்கொடாதிருந்தால்.. ...சிறியேனுய்யனே
தீவினையொழித்திடத்..........திறமிகுந்தய்யனே-நீரங்*

(சரணங்கள்.)

அமரனாச்சிறையிட்ட.... ...அசரனைவென்றோயே
குமராஎன்மனதினிற்.........குடிபுகுமென்றாயே. நீரங்*

தந்தைக்குப்பொருள்சொன்ன... தணிகாசலபதியே
எந்தன்வினையொழிக்க...... இதுகாணல்லததியே. நீரங்*

சிரகிரிதனில்வாழுஞ்....... ... ...சின்மயானந்தனே
பிரமனைச்சிறையிட்ட... ...பிரணவபுரிக்கந்தனே. நீரங்*

௫-இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்திரிபுடை.

(பல்லவி.)

சங்கரர்குருள்பாலா-சரவணபவசீலா-சரணளித்திடுவேலா *

(அநுபல்லவி.)

துங்கமெய்ஞ்ஞானியர்..........துயரகற்றிடுமேலா
எங்கள்குருபரனு... ... ...யெழுந்தருள்விசாலா. சங்கர*

(சரணங்கள்.)

அந்தகனையுதைத்த... ... ...அரனார்க்கருள்குரவா
அடியார்வினைதவிர்க்க ......அறிவாகியபுரவா
இந்திரன்றனைக்காக்க... ... ...இரக்கமுற்றவுரவா
இனியாகிலுமெனக்குன்... இணையடிகள்தரவா. சங்கர*

கருணைக்கடலமுதே... ... கருத்திலூறியதேனே
காரணமுடிவினில்......கலந்துதேறியதானே
அருணகிரிநாதர்க்கு .. ... அன்றருகூறியகோனே
ஆனந்தவீடெவர்க்கும்...அளிக்கவீறியவானே. சங்கர*

மந்திரமறைமுடிவில்... ... மருவியடுப்போனே
மாதவர்மயக்கத்தை ... மாறக்கெடுப்போனே
தந்திரஎந்திரங்களின் ... றடையைவிடுப்போனே
சமரபுரியுறைந்தென் - சஞ்சலந்தடுப்போனே. சங்கர*

—*—

௫-இராகம்-நாதநாமக்கிரியை-சாப்பு-தாளம்.

(பல்லவி.)

ஓடாதேநில்லாய்-மனமேநீ-ஒருவழிசெல்லாய்......*

(அநுபல்லவி.)

ஓடாதிருந்தால்...... ...ஒடுங்கியமனைக்கொல்வாய்
ஒருமித்தனுதினமுங் -கருமப்பகையைவெல்வாய். ஓடா*

(சரணங்கள்.)

செருக்கற்றிருந்து.....................திருவடியைத்
தியானம்புரிந்து........ ... .*
கருவகங்காரக்......... ...கடலைக்கடக்கவேணும்
கனமேனுமயிலோனைக்கருத்துள்ளடக்கவேணும். ஓடா.

அருந்துயர்விட்டு ... ...அறுமுகனை
அறிந்துநீயெட்டு... ... .*

பொருந்துமவனடியைப்-பொங்கமுடன்பணிவாய்ப்
பொடியாயுன்பவமெல்லாம்-போக்கித்தனைத்துணிவாய். ஓ

காமனைவாட்டி ....அவன்கணையை
கண்டித்துப்போட்டு........ ....*
பூமனைச்சிறையிட்ட...போரூரான்பணிசெய்வாய்ப்
போதவமுதமுண்டு ... போற்றியேநீயுய்வாய். ஓடா*

எ-இராகம்-கல்யாணி-தாளம்சாப்பு.

(பல்லவி.)

கொடுமைசெய்திடலாமோ-முருகாவுன்......*
அடிமையென்பதும்போமோ.......... ... ...*

(அநுபல்லவி.)

இடும்பையொழித்தென்னை ... வீடேறச்செய்யாமல்
இணையடிக்கீழ.......... ...யிருந்திடவையாமல். கொடு*

(சரணங்கள்.)

முன்செய்வினைப்பயனால் ....முழுதுமயங்கிடாதே
மூர்க்கருடனிணங்கி... ... மூற்றுந்தியங்கிடாதே
உன்செயலெனநாடி... ... ...உள்ளங்களித்திடாதே
உணர்வுக்குணர்வாகிய...உண்மையளித்திடாதே. கொ*

கனதனத்திச்சையாலே... ....கலங்கிவருந்திடவும்
காமன்விடுங்கணையாற்......கவலைபொருந்திடவும்
மனதின்படிசுவையை.........மகிழ்வாயருந்திடவும்
மறப்புநினைப்பில்நிதம்... மருவித்திரிந்திடவும். கொ*

எள்ளுக்குளெண்ணெய்போல்... எங்குமாயிருந்துநீ
எவ்வுயிர்க்குயிராக.......... ....இலகியிருந்துநீ
கள்ளப்புலன்வழியோர்...... ......காணாதிருந்துநீ
காரணத்தைப்போரியிற்......காட்டாதிருந்துநீ. கொ*

௮-இராகம்-பியாகடை-தாளம்-சாப்பு.

(பல்லவி.)

நித்திரைவிட்டு-மனமே-நினைவினைக்கட்டு... ...... *

(அநுபல்லவி.)

முத்திரையெனுமோன... முடிவினிலையைத்தாவ
முருகன்திருவடியை...............மறவாமலேமேவ. நித்தி*

(சரணங்கள்.)

கோபமுறாதே ....கொலையெனுங்
கொடுமைபெறாதே............ .... *
தாபம்வாராமல்....... ... ...தணிகாசலனைக்கிட்ட
தடையற்றிருக்கநிசந்...... தயங்காமலேநாட்ட. நித்தி*

சீறிவிழாதே...... ... ... பெண்ணாசையிற்
சிக்கியழாதே.......................... *
வீறிவிளங்கிய.., ...வேன்முருகனைக்காண
வேண்டிமலர்கவேவும் ...விருப்புனக்குத்தோண. நித்தி*

வாடிநில்லாதே............... ... ...நல்லோர்கள்
வருந்தச்சொல்லாதே......... ....*
ஆடியபாதன்..... ... .அளித்தபோரூரானை
அடியார்மிடியகல... ... ...அருளுமுதாரனை. நித்தி*

—*—

௯-இராகம்-தாளம்.

(பல்லவி.)

கருத்தையறிந்துபாரடி-முருகனுள்ளக்-காதல்தெரிந்துசேரடி*

(அநுபல்லவி.)

திருத்தமுடனே அந்தத்-திருப்போரூர்தனிற்சென்று
ஒருத்தருமறியொணாத... ஓங்காரத்துட்பொருளின். கரு*

(சரணங்கள்.)

சத்தமுமவனைச்.......... ......சார்ந்துநீநில்லடி.
சகியேயென்னன்பனாநீ - ஜாடையாய்வெல்லடி.
பெத்தவிகமாறுலும்... ... ...இணங்கிநீபுல்லடி.
யேகாந்தமாகவே ... ...யிருக்கஇதஞ்சொல்லி. கருத்*

அல்லும்பகலுமவர்க்......... அன்புவரவேகூறாய்
ஆனந்தமாயிருக்க ... ... அதியுல்லாசந்தேராய்
சொல்லுமதாமான........ சோகமுறவேபாராய்
தோகையேயவரைநீ...தோய்ந்திடவேசென்று. கருத்*

இனியாகிலும்வணங்கி -யெம்பெருமானைக்கெஞ்சு
ஏதவர்செய்தாலுநீ ......பெண்ணுடமேலமிஞ்சு
தனியாயிருந்தனைபத்......தாழ்ந்திடவேகொஞ்சு
தாமசஞ்செய்யாமல் ... ...தற்பரமூர்த்தியின். கருத்*

௰-இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

(பல்லவி.)

சுழிமுனைதனினேராய்-மனமேயேறிச்-சுகத்தையறிந்துபாராய். *

(அநுபல்லவி.)

வழியிரண்டையுந்தேடி...வான்பொருடனைக்கூடி
விழியிரண்டையுமூடி ... விமலன்பதத்தைநாடி. சுழி*

(சரணங்கள்.)

சித்தவிகாரத்......... ......திருக்கையொழித்திட
சின்மயமாகச் ... .சிறந்துசெழித்திட
பத்தியுடனே...... ... .பணிந்துவிழித்திட
பாவகந்தன்னைப்............பரிவாய்க்கழித்திட. சுழி*

கனவெனுமுலகத்தைக்... ...கட்டோடறுத்திட்டு
கவலையெனுமபக்கங் ...... கழியவெறுத்திட்டு
நினைவினைக்கடந்த .... நிலையைக்குறித்திட்டு
நீயெனுமாணவ ... ...நிறையைப்பிறித்திட்டு. சுழி*

திமிரமலமனைத்துந்... ... ...திருவருளால்வென்று
பிரமையதைமொழிக்கப்பிரணவந்தனில்நின்று
குமரகுருபதத்தை...... ...கும்பிட்டறியஇன்று
கூசாமற்போரூரிற்......குடிமேவவேசென்று. சுழி*

கக-இராகம்-சமாஸ்தாளம்-ஆதி.

(பல்லவி)

நான்சொல்லுகிறேன்- மானே-நான்சொல்லுகிறேன் ...*

(அநுபல்லவி.)

நான்சொல்வார்த்தையைத் ... தள்ளாதே-எந்தன்
நாயகன்பாதத்தைநம்பி.................. விள்ளாதே. நான்*

(சரணங்கள்.)

ஆதியுமந்தமும்...... ... .இல்லாதவனென
ஓதியமறையின்...... ... .உண்மையிதாமென. நான்

விண்டலமுழுதும்...... ....விளங்கியபரனைக்
கண்டுகளித்துக்...............சுருதியில்லையென. நான்*

போதமெனுந்திருப்.......... ...போரூரான்றனைப்
பாதமிரண்டையும்... ... .இறைஞ்சிடுநீபோ. நான்*

கஉ-இராகம்-துஜாவந்தி-தாளம்-சாப்பு.

(பல்லவி.)

வறுமைக்காளாக்கிறாயே... ......முருகாஎன்னை
வருத்தப்படுத்துறாயே........... .. ..*

(அநுபல்லவி.)

வறுமையைநீக்கியுன்றன் வசமாக்கிக்கொள்ளாதே
வஞ்சகநீக்கியுன்... ......வாய்மொழிவிள்ளாதே. வறுமை

(சரணங்கள்.)

அரும்பெருஞ்செல்வமெனும்-அருள்வழிகாட்டாதே
அதிகசுகபோகத்தில்...அடியேனைநாட்டாதே
ஒருமையதாகவே........ ...யுருகிடக்கூட்டாதே
ஓதிப்பணிவதற்குள்...உணர்வைநீபூட்டாதே, வறுமை*

அசைவற்றிருப்பதற்கென்- அகந்தனையுருக்காதே
அநுதினந்தெரிசிக்க-அன்பினைப்பெருக்காதே

இசைவாயுனைப்பணிந்து......எண்ணியிருக்காதே
இன்பமெனும்வள்ளத்தில் - இணங்கிக்கலக்காதே. வரு*

கந்தமலர்கடுவிக்.........கருத்தில்நினைந்திடாதே
கனிவாயுன்பணிசெய்யக் - கருணைபரிந்திடாதே
சிந்தைமயக்கொழிக்கச் ...சிறிதுந்தெரிந்திடாதே
சிறந்தபோரியைச்சேவை-செய்துமிருந்திடாதே. வரு*

௰ரு-இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

(பல்லவி.)

என்னசெய்குவாய்நெஞ்சே...எமன்வரும்போ
தென்னசெய்குவாய்நெஞ்சே.............*

(அநுபல்லவி.)

பொன்னைவிரும்பிநீ... ...போராட்டமேபுரிந்து
போரூரனைமறந்து.........போகத்தழுந்தினால். என்ன*

(சரணங்கள்.)

தந்திரம்பேசத்...... ... ...தலைப்பட்டிருக்கிறாய்
தானெனுமகந்தையைத்...தாவிச்செருக்கிறாய்
நந்திக்கொலுவதனில்............நடனம்புரிகின்ற
நாயகன்கழலைநீ...... ...நாடாதிருந்திட்டால். என்ன*

பெண்ணாசையால்நிதம் - பேதையாய்க்கவிக்கிறாய்
பேராசையென்னும் ...பெருக்கில்தவிக்கிறாய்
விண்ணவர்க்கரசாய்......... ...விளங்கியநாதனை
விரைமலர்தூவி... ...விரும்பாதிருப்பையேல்.என்ன*

புத்தியில்லாமற் ... .புலம்பித்திரிகிறாய்
பூதலத்தாரைப்...........புகழ்ந்துபுசிக்கிறாய்
நித்தியமாக ....நிறைந்தகுருவினை
நீநினையாம...... ... ...லிருந்தாலந்தோவினி.என்ன*

௰ச-இராகம்-காம்போதி-சாப்புதாளம்.

(பல்லவி.)

அடியவர்க்கிரங்கிய... ... ஆறுமுகதெய்வமே
அடியேனைக்காப்பதரிதா......... ....*

(அநுபல்லவி.)

படிமிசைநின்று...... ......பலித்குழன்றேநிதம்
பத்திபுரியாமல்...... ....நித்தம்வருந்தவோ. அடிய*

(சரணங்கள்.)

நோயசெய்வறுமையினால் ...நொந்துவருந்தவோ
நோக்காரைநோக்கிநான்...நடுங்கிக்கலங்கவோ
ஆயுமறைமுடிவி... ....லமர்ந்தபெருமானே
அறிவுக்கறிவாய்நின்ற...அகண்டபெருவானே. அடிய*

காமன்விடுங்கணைகள்... ......காயத்தைவாட்டுதே
காரிகையார்மயக்கில்............காலங்கழியுதே
தாமசம்நீசெய்தால்... ...தாளாதினியென்னாலே
தடையறுத்தடியேனைத்- தற்காத்தருளையனே. அடிய*

பொல்லாதவரிணக்கம்.........போகாதிருக்குதே
போகசுகங்களைப்......பொருந்திப்பூரிக்குதே
வல்லசூரனைவென்று...... ......வானவர்க்கருளிய
வண்மைதிகழ்போரூரில்-வாழ்கின்றமுருகனே. அடிய*

௰கூ-இராகம்-கலியாணி-ஆதிதாளம்.

(பல்லவி.)

தடையுண்டோசொல்ஐயா-முருகையா...........*
தடையுண்டோசொல்ஐயா............... ....*

(அநுபல்லவி.)

தடையுண்டோசொல்விந்தத்...தாணியிலேலமைமைத்
தடுத்தாட்கொள்ளுகின்றதயாளனென்பதுபொய்யா. தடை

(சரணங்கள்.)

விடையின்மேலேறிவரும் ... வித்தகரருள்பாலா
விரிஞ்சனைச்சிறையிட்ட...... விமலவடிவேலா
கடையனிவனென்றென்னைக் ...கைவிடலாகுமோ
கடவுளர்க்கருளிய... ......கந்தனேகாத்திடத். தடை*

நாலுமறைமுடிவில் ... ...நடனமிடும்பொருளே
நாதாந்தமானவர்க்கு ...நன்மைதருந்தெருளே
காலுக்கபயமென்றாற் ......கதியளிக்கும்அருளே
கருணையானந்தமெனுங்- கந்தனேயிந்தவேளை. தடை*

மூலமெனுமாறு............ வீட்டினையுந்தாண்டி
மூதறிவாயொளிர் .... மூர்த்திகாரணனேநீ
பாலதுபோலநெஞ்சம் ... பரிசுத்தமாகவேண்டிப்
பரிவுடனேயுன்றன்............பாதமளித்திடத். தடை*

௰௬-இராகம்-பியாகடை-சாப்புதாளம்.

(பல்லவி.)

திருவுளமிரங்காதோ-முருகாஎன்றன்... ...... *
தீவினைதீராதோ ... ...*

(அநுபல்லவி.)

மருமலர்சூடிய ....மாதர்களின்பத்தை
மறந்துன்திருவடியை...... மருவிடஎன்தன்மேல். திரு*

(சரணங்கள்.)

தருணத்திலுதவாமல் .. தடைசெய்தாலெப்படி
தாங்கப்படுமோஎன்றால்......தற்பரமூர்த்தியே
அருவுருவாகி...,......... ... யகண்டவெளிதனில்
அன்புடன்சென்றங்... ... கசைவற்றிருந்திடத். திரு*

வந்துகேட்பவர்க்,...... கில்லையென்றுசொன்னால்
வாதுக்கிழுத்து... வதைக்கிறாயென்செய்வேன்
இந்தவேளையினிற்... ... ...கைவிட்டாலெப்படி
ஏழையின்மீதினி... ... லிரங்கிக்கருணைசெய்யத். திரு*

காமன்விடுங்கணை ....காயத்தைமெலிக்குதே
  காரிகையார்மையல்... ...கருத்தைக்கலைக்குதே
தாமசஞ்செய்யாமல்............தையலிருவருடன்
  தங்கமயிலின்மிசை..........யிங்குவருவதற்குத். திரு*

௯-இராகம்-நாதநாமக்கிரியை-சாப்புதாளம்.

(பல்லவி)

காணுவோம்வாராய்-முருகனைக்-காணுவோம்வாராய்

(அநுபல்லவி.)

காணுவோம்வாராய்... ....கருத்தையடக்கிக்
கதிர்முனைதன்னிற்கண்... ...மூடியிருந்துநாம். காணு*

(சரணங்கள்)

ஆதியுமல்ல ....,...,... ...திருவுரு
  வானதுமல்ல ... ...*
பாதிமதியணிந்த....,.........பரமர்க்கருளவல்ல
  பங்கயபாதத்திற்... ......தங்கிநாமிருப்போரும். காணு*

நடுவணைதன்னில்...... ....நடனஞ்செய்யும்
  நாயகன்முன்னில் ... ...*
கொடுமலம்போக்கிநீ-...கும்பிட்டிருக்கவென்னில்
  குமரகுருபரனைக்... ... கூசாமலெண்ணிநாம். காணு*

நான்மறைக்கப்பா............. ... ...விருக்கின்ற
  நாதனுக்கொப்பால் ... ...*
ஆன்மசுத்தை...... ... ...படையாததப்பால்
  அம்பரமான... ...அரும்பெருஞ்சோதியைச். காணு*

நீதிநிறைந்த.............. ....நிலையிது
  வாகவுறைந்த ... ... *
தீதிலாஞானச்...... ... ...சுடரெனவேயறைந்து
  தினமுமறவாம..........வினைமூற்றிருப்போரும். காணு*

௰௮-இராகம்-அசாவேரி-சாப்புதாளம்.

(பல்லவி-)

சண்முகதேவா-என்னையாளத்-ததியிதுநீவா... ...*

(அநுபல்லவி.)

உண்மையாய்ச்சொல்லுநா... ணுருகிப்பணிந்திட
ஓமெனும்பொருளினை......யோதிக்கனிந்திட. சண்முக*

(சரணங்கள்.)

ஐம்பொறிதன்னை-......... ... ...யனுதினம்
அடக்கிநின்னருளை... ... ...*
நம்புமடியவரை............. நாடோறுங்காத்திட்ட
நாதாஎன்மயக்கை...... நலமாகத்தீர்த்திட்ட.சண்முக*

தேவர்சிறையைத்... ... ...தீர்க்கவந்த
திருவருளின்றவா ... ... *
சேவற்கொடியுடைய........தென்போரிமேவலவா
ஆவலோடுமேவுன......மடியேனுக்கருளுவாய். சண்மு*

பந்தவிகாரப்............... ... ...பாசவினையைப்
பறிக்குமுதாரா... ... ...*
எந்தன்கொடுமலத்தி ....னிருள்கெடத்தருவாய்
ஏழைபங்காளாஇத்.........திருணம்நீவருவாய்.சண்மு*

௰௯-இராகம்-சாரங்கா-சம்பைதாளம்.

(பல்லவி.)

நடவாதிருப்பதுவும் -.... நலமல்லவேமனமே
நாயகனையணைவதுதா......னமக்குசுகந்தினமே

(அநுபல்லவி.)

திடமாகத்திருச்சமரபுரி... ... ...புறைந்தாவினமே
தேங்காமலேநீதமுந்...... ...தேடிவருந்தனமே. நடவா*

(சரணங்கள்.)

மடமைசெறிமாதரின்பில்...|...மயங்காமலேவிடுத்து
மாறுதகாமமதை.......... ...மருவாமலேதடுத்து
விடமுண்டவரனளித்த ... விமலனிடம்போயடுத்து
வீணுசநாளெல்லாம்......ஒழியாமலேதொடுத்து. நட*

மும்மலவிகாரவிருள்...... ......மூடாமலேதுரத்தி
மூர்க்கருறவினையனைத்தும்... முறிபடவேதிருத்தி
அம்பரவிலாசமெனும்... அருள்வழியிலேசெலுத்தி
ஆனந்தமதுவெனவே ... அறுதினமும்நிறுத்தி. நட*

தேகமெனுமபிமான- செருக்குதனையேயொழித்துத்
தேறுமல்வாடுகின்ற... ... தேக்குமெலாங்கழித்து
ஏகமெனும்பெருவெளியி- லெப்போதுமேதனித்து
ஏகார்தத்தலமதனி... ... ...லேறிநீமிகக்களித்து. நட*

—*—

உ௰-இராகம்-பயிரவி-ஆதிதாளம்.

(பல்லவி)

தேடியழைத்துவாடி......அவரைக்கண்டு
தேடியழைத்துவாடி............ ... ...*

(அநுபல்லவி.)

கூடினவர்பிரிந்து ... மோடிசெய்கிறாரிப்போ
நாடியென்சேதிசொல்லி-ஓடிப்போய்க்குமரனைத். தே*

(சரணங்கள்.)

வித்தாரமானவற்கு... ...ரித்தாய்ப்பணிசெய்யினும்
சற்றுகிலுமிரக்கம்... ... வைத்தாலல்லவோதினம்
எத்தாய்நடக்குமெந்தன்......... பத்தாஎனைக்கலந்து
முத்தாடநானவரை... இத்தாகத்தோடுநீபோய். தேடி*

பர்துஇருதனமு... ... ...யர்ந்துவசந்தன்கணை
வந்துளனைத்துளைக்க..............நைந்துமதிநுதல்க
லைந்துமனமிகவ...... ....லைந்துஅவரைநான்க
லந்துகளித்திடவு......... வந்துளன்சாமியைத். தேடி*

வள்ளிதினைபதனை.........பள்ளிப்புனத்தில்மிகத்
தெள்ளிமதுகலந்து...... ...உள்ளியருந்துமென
அள்ளியளிக்குமந்தக்..............கள்ளியிடத்துவந்து
பள்ளிதனிற்றுயிலும்...புள்ளிமயிலூர்தியைத். தேடி*

௨௧-இராகம்-ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

(பல்லவி.)

ஆதிவேதாந்தசோதிமயமே... ... அதீதமான
ஆதிவேதாந்தசோதிமயமே.................*

(அநுபல்லவி.)

பூதிசடாக்ஷர............ ...பூரணகெண்டிகா
தாரணயோக..............சமாதிஅனுக்கிரக. ஆதி*

(சரணங்கள்)

மானுக்குவந்தமரு...... ... ...கோனேசத்தியளித்த
வேனுக்கிசைந்தமுரு ... கோனேபூசுரர்தொழும்
நானுமறையின்பொரு....... ...ளாகிநிறையுமுன்தன்
கானுக்கபயமென்ற... ...கமலனைச்சிறைவிட்ட. ஆதி*

தந்திமுகர்க்கிளைய............ ...நாதாஅபயமூற்ற
இந்திரன்தனைக்காத்த... ... நீதாதினகரன்போல்
பந்தவிருளகன்று...... ... ...நந்திகொலுவினுறை
விந்தைமயிலின்மிசை...... ......வந்திடுகுருபா. ஆதி*

சூரனொனுங்களைத்.........தேடிப்பறிக்கவென்று
வீரமுடனவர்மே.........லோடியோய்த்திடாமல்
ஆரவாரமுடன்......, ...போரிலவரையெல்லாம்
நேரதாகக்கொன்ற... நாதனெனும்போரிவாழ். ஆதி*

௨௨-இராகம்-துசாவந்தி-ஆதிதாளம்.

(பல்லவி.)

சரணஞ்சரணமையா-எளியேனிடர்-சஞ்சலந்தீருமெய்யா ...*

(அநுபல்லவி.)

மரணம்வருமேயென்று ... மனதுபயப்படாமல்
மல்லுக்கிழுத்தென்னை ....யல்லற்படுத்துதே. சரண*

(சரணங்கள்.)

குறியிலிருந்துமுன்னைக் ... கும்பிடேனென்குதே
குடிகெடுப்பவருடன் ... ... கூடித்திரியுதே
அறிவுக்கறிவான .... ஆறுமுகத்தெய்வமே
அயிர்த்துங்காவாதிருந்தால் ... அலைகுவேனையனே. சரண*

தத்திவிழுந்து ....தலைகீழாய்நிற்குதே
தன்னதென்றுமனத் ...... தானேசெருக்குதே
வித்தகனேதிருப் ....போரூரில்வாழ்கின்ற
விண்ணவர்க்கரசான ... அண்ணலேயருளுவாய். சரண*

கந்தமலர்கடேவிக் ....கருதேனென்றிருக்குதே
காரிகையார்மயக்கில் ... ...கலங்கியிளைக்குதே
அந்தகன்வருவதை ....யறியாமலென்மனது
ஐயையோநாளெல்லாம்-அவமாய்க்கழிக்குதே. சரண*

உரு-இராகம்-ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

(பல்லவி.)

என்னசொன்னாலும்மனந் .... தெளியாதிருக்குதே
என்னசெய்குவேன்கர்த்தனே.................. ...*

(அநுபல்லவி.)

அன்னையுந்தந்தையு ....மானநீயேயல்லால்
அவனியிலடியேனை ....யாதரிப்பவருண்டோ. என்*

(சரணங்கள்.)

தன்னந்தனியிருந்து ...... தவம்புரிகுவமென்றால்
தையலார்மையல்கொண்டு-தடுத்தென்னைவாட்டுதே
தென்னவனேதிருப்... ......போரியில்வாழரசே
தேவர்கள்சிறைமீட்ட ... தெய்வமேயருள்புரி. என்ன*

பத்பலவிதத்திலும் .... பரதவித்தின்னலும்
பாருள்ளோரேசிடப்... ... பாவத்துக்கிழுக்குதே
அற்புதமானவுன்றன்... அருள்பெற்றவருக்கேவல்
அருதினஞ்செய்திட ... அடியேனுக்கருளுவாய். என்*

கொள்ளியுடன்தேள்கொட்டக்-குதிக்குங்குரங்கதுபோற்
கூசாமலேநிதமும்... ... ...பாசத்திலமூழ்ந்துதே
வள்ளலேயென்றுனை .... வாழ்த்திவணங்கிட
வந்தெனைக்காத்தருள் ... .கந்தாகதிர்வேலா. என்*

௨௨ - இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

(பல்லவி.)

திருவருள்புரியாயோ...... .... எளியேனைத்
தேற்றிநீயாளாயோ......................................*

(அநுபல்லவி.)

அருமறைமுடிவான ... ... ஆனந்தவெள்ளமே
அமரர்தொழுகின்ற ... ... குமரகுருபரனே. திருவ*

(சரணங்கள்.)

பத்தபராதீன ....ரென்றுபழவடியர்
பரிவுடனுன்திருக்... ... ... கோயிலைவலம்வந்து
சித்தமலமொழித்த...... ... ...சின்மயவடிவான
சிதம்பரதேவற்குச் ... சிவஞானமளித்தோனே. திருவ*

பத்துச்சிரத்தவனை ... வெட்டித்தளாயிற்றள்ளும்
பண்புள்ளமாலுக்கன்.........பானமருகோனே
தத்திவிழுகின்ற... ....பித்தமனக்குரங்கு
முற்றிலும்அழியாமல் ... முன்வந்துகாத்திடத். திருவ*

பலபல்விதத்திலும்.......முறையிடுந்தன்பத்தைப்
பரிவாகக்கேளாமல்... பார்த்திருப்பதுநன்றோ
நிலவரமாகிய................. ...நித்தியானந்தத்தில்
நிரந்தரமாகவே,......... ...நின்றுபணிந்திடத். திருவ*

உ௯ - இராகம் - சவுராஷ்ட்டிரம் - சாப்புதாளம்.

(பல்லவி)

வீதியில்வாராரோ.......... ... ...அவரென்னை
விருப்பிப்பாராரோ..........................*

(அநுபல்லவி)

நீதிதவறாத ....நித்தியபரிபூரண
நிர்க்குணநிறைவான... ......நின்மலனெனையாள. வீதியி*

(சரணங்கள்.)

மாரன்கணைவிடுத்தென்............ ... மனநோவ
மார்பைத்துளைக்கிறானே............... ...*
சூரன்தனைத்துணித்த.......... ...சுந்தரவடிவேலர்
வீரமுடனேவந்து......விரகந்தணிப்பதற்கு. வீதியி*

திங்கட்புலிசீறுதே......................சிறுதென்றல்
அங்கந்தன்னைவாட்டுதே... ....*
சிங்கந்தனையடக்கச்...............சிம்புள்வடிவான
சங்கரனீன்றிடுஞ்.........சண்முகனென்னைக்கூட. வீதி *

போதுவிடியிலையே ... .என்துன்பத்தைப்
போதுமென்பாரிலையே...... ... .*
வாதுக்கெதிர்த்துவந்த... ...வன்சமணரைவென்று
சாதுக்கள்வினைதீர்த்த... சரவணனெனைப்புல்ல. வீதி *

உ௰ - இராகம் - முகாரி - ஆதிதாளம்.

(பல்லவி)

சும்மாயிருப்பாய்நெஞ்சே... ...யினியாகிலுஞ்
சும்மாயிருப்பாய்நெஞ்சே........ ... ...*

(அநுபல்லவி)

சும்மாயிருந்தந்தப்... ... ... பெம்மான்றனை நினைக்க
எம்மாத்திரமாகிலு..............மும்மாயைநீக்கியே. சும்*

(சரணங்கள்)

இம்மாயைக்காட்டைவெட்டி - இருளையெல்லாமகற்றிச்
செம்மான்மகளைக்கண்டு...... சேர்ந்திடும்நாதனை
மும்மாயைக்கப்பாலா... முதல்வனிடத்திற்சென்று
அம்மாஇனியாகிலும் அசைவற்றிருந்துபோற்றச். சும்மா*

கற்றதுங்கேட்டதுங் .. கருத்தைச்செலுத்தினதுங்
கவலையெனுங்கடலிற்... கவிழ்த்துகலங்குகின்ற
குற்றத்துக்காளாகிக்... ... ...குவலயந்தன்னிலே
கும்பிக்கிரைதேடிக் ... ...குதித்துவருந்தாமல். சும்மா*

கண்மூடியனாக்கனைங் ... கவலையெலாம்விடுத்துக்
கனவாகும்பிரபஞ்சத்தைக் ..கருதாமலேயகற்றி
விண்ணவர்துதித்திடும் - விளங்குந்திருப்போரூரில்
விமலன்திருவருளை......விரும்பிமகிழ்வுடனே. சும்மா*

—*❀*—

உஎ-இராகம்-பைரவி-ஆதிதாளம்.

(பல்லவி)

ஒன்றுஞ்சொல்லாதிருந்தால்-வீட்டுப்போமோவும்மை
ஒருமொழிசொல்லுமையா...... ....*

(அநுபல்லவி)

நன்றைச்சொன்னாலுஞ்சரி- தீதைச்சொன்னாலுஞ்சரி
நாயகனேயுனை...............நாடிவந்தனக்கு. ஒன்றுஞ்*

(சரணங்கள்)

மப்புகளிறங்குது...... மழைபெய்யேனென்குது
மாருமலேதென்றல் ... ...வாதாட்டம்புரிகுது
இப்புவிக்கரசேயென் - றெண்ணித்துதித்தேநாளும்
எம்பிரானென்றுன்னை..... நம்பினஅடியேற்கு. ஒன்று

வேடிக்கைதீர்பார்த்தால்... வேறென்னஇருக்குது
வெவ்வினையால்மனம்...... ...வேசாறியுழலுது
மூடியவிருளாலே ... ...மோசம்வருமெனக்கு
முத்திலுங்கெடுக்காமல்,.. முன்வந்தருள்புரிந்து. ஒன்று*

ஒட்டாரம்நீசெய்தால்-.........ஒட்டிவருமேபழி
ஒருக்காலுமழைபெய்யா-திருக்குதேயென்னவழி
கட்டுக்கடங்கேனென்று-கலங்குதேயென்னெஞ்சங்
கருணைபுரிவதற்குக்... ...காலமிதுவேதஞ்சம். ஒன்று*

உ௮-இராகம்-முகாரி-சாப்பதாளம்.

(பல்லவி)

கடைக்கண்பாரம்மா... ...இனியாகிலும்
காத்தருள்புரியம்மா........ ... . *

(அநுபல்லவி)

அடைக்கலமெனவந்தும்-அடிமைகொள்ளாதிருந்தால்
அவனிதனிலுழன்று... ...அல்லற்படுவேனந்தோ. கடை*

(சரணங்கள்)

தேற்றுவாரில்லாமல்.........தேம்பியழுகின்றேன்
தெரிவையர்மயக்கத்தில்-தினமுஞ்சுழல்கின்றேன்
நாற்றிசையும்புகழும்..............நாதன்மருமகனே
நாயகனுந்திருப்......... ..போரியன்பாரியே. கடை*

அண்ணைக்கண்ணுடமாக......வயிற்றைவளர்க்கின்ற
அருந்துன்பம்வந்தென்னை-ஆட்டிப்படைக்குதே
பெண்ணுக்குமண்ணுக்கும் - பொன்னுக்குந்தவியாமல்
பேரானந்தவாரியிற்... ....பேசாதிருப்பதற்குக். கடை*

ஆங்காரங்கோபம்...... .... அபிமானமூன்றினில்
அல்லும்பகலும்நான் ... அகப்பட்டிருக்கிறேன்
நீங்காதசிவயோக....... ... ...நிட்டைபுரிவதற்கு
நின்னைவிடஎனக்குப் ... பின்னையொருவரில்லை. கடை*

உ௯ - இராகம் - மோகனம் - சாப்புதாளம்.

(பல்லவி)

என்சும்மாவிருக்கிறாய்... ...நெஞ்சே - பணிசெய்யாமல்
என்சும்மாவிருக்கிறாய்

(அநுபல்லவி)

என்சும்மாயிருந் துநீ...... ...எமவாதைக்காளாகிறாய்
என்னையாண்டருள் நாதன் - தன்னைவணங்கேனென்று. என் *

(சரணங்கள்.)

சுத்தநிராதார..................சுயவெளிதன்னிலே
சும்மாயிருக்குமந்தப்பெம்மான்பதத்தைக்கண்டு
நித்தம்பணிந்துருக...........நீவாரோனென்கிறாய்
நின்னைவிடஎனக்குப்பின்னையொருவருண்டோ. என்சு *

கும்பிக்கின்றேதேடிக்...... ...குவலயத்தனிற்சுற்றிக்
குதிக்கிறாய்குரங்குபோல் ...கூசாமல்ஐயையோ
உம்பர்பணிந்திறைஞ்சுந்........தம்பிரானருளோநீ
யுண்மையுடன்கலக்க ... ... நம்பிவரோனென்று. என்சு *

தத்தித்தலைகிழாகத்..................தவிழுகிறாயே
தன்னைமதிப்பவனா ... ... இன்னங்கலக்கிறாயே
பத்திபுரிபவனாப் .. ..பழகாதிருக்கிறாயே
பரமானந்தவெள்ளத்திற்-படிந்திடனெங்கிறாயே.என்

௯௰ - இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

(பல்லவி)

கெட்டுப்போவாயென்று ... குருநாதன்சொல்லியும்
கேளாததென்னநெஞ்சே.................. ... ... *

(அநுபல்லவி)

நட்டநடுவணையில்......... ... நடனம்புரிகின்ற
நாதனெனுந்திருப் ... ...போரூரனைமறந்தால். கெட் *

(சரணங்கள்.)

சட்டவட்டமாகச்... ... சமைத்துண்டுகளிக்கவுஞ்
சப்பிரகூடமஞ்சந் ... தனிற்றுயில்செய்யவும்
மட்டில்லாக்காமத்தால்... ... ...மாதரைக்கூடவும்
மல்லுக்கிழுப்பதற்கு ... ...மாறுமல்வருகிறாய். கெட் *

துட்டருடனேகூடித்... ... துடுக்குகள்புரிகிறாய்
துடியிடைமாதர்க்கேவல்-துணிவாகச்செய்கிறாய்
ஒட்டாரமாகவே ... யொடுங்கேனென்றிருக்கிறாய்
ஓடிவந்துநமன்...உறுக்கும்போதென்செய்வாய். கெட்*

பொன்னில்விருப்பமுற்று...இன்னருடமிருக்கிறாய்
பொய்யானவாழ்வினை...மெய்யென்றிருக்கிறாய்
தன்னையறியாத...... ... ...சன்னதங்கொள்கிறாய்
தையலார்மையலிலே... தளர்ந்துவருந்துகிறாய். கெட்*

கூக-இராகம்-ஆகரி-சாப்புதாளம்.

(பல்லவி)

என்னசெய்குவேனையா...............என்பவவினை
எப்போதகலுமையா ....*

(அநுபல்லவி)

உன்னதமாகிய - ... ...உனதுபொற்பாதத்தை
உள்ளத்திருத்திநான்...உருகிப்பணிந்திடேனே. என்ன*

(சரணங்கள்)

கள்ளப்புலன்வழியில்.........துள்ளித்திரிந்துநிதம்
கசடரிடஞ்சென்று... ...கலக்கியுழல்கின்றேன்
எள்ளுக்குளெண்ணெய்போ-லெங்கும்நிறைகின்ற
ஏகபரிபூரண.............. ...என்குருநாதனே. என்ன*

கயல்விழிமாதர்கள்... ... கலவியிற்சென்றுநான்
காலனுக்காளாகக்... ....காலங்கழிக்கின்றேன்
வயல்கள்நிறைதிருப்.........போரியில்வாழ்கின்ற
வள்ளிதெய்வயானை... ... மகிழும்மணாளனே. என்ன*

கும்பிக்கிரைதேடிக்.........குவலயந்தனிற்சுற்றிக்
குருமொழிதனில்நின்று-கும்பிடாதலைகின்றேன்
எம்பெருமானென்று ... இமையவர்பணிந்தேத்த
எவ்வுயிரையுங்காக்க...... எழுந்தநற்றெய்வமே. என்ன*

௩உ-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

(பல்லவி)

கடைக்கண்பாரையா............அடியேனைக்
காத்திடவேணுமையா............................*

(அநுபல்லவி)

கடைக்கண்பாராதிருந்தால்... கன்மவினைகளாலே
கலங்கிவருத்தமுற்றால்...கடைத்தேறுவதென்றோ. கடை*

(சரணங்கள்.)

மலவிருள்நீங்கேனென்று.........மாறிமாறிவந்து
மயங்கிடவேநிதம்... ...மதிமோசஞ்செய்யுதே
அலங்கோலமாகவென்னை... ஆட்டிப்படைக்குதே
ஆறுமுகதெய்வமே-அஞ்சலென்றெனைக்காக்க. கடை*

நாரியர்க்கேவல்செய்து......நலிந்திடச்செய்யுதே
நாலுவிதத்திலும்..... ......நாசமடையுதே
மாரிபெய்யாமலின்னம்... மடியுதேபயிரெல்லாம்
மகிழ்வுடன்வருஷிக்க.........மயிலேறிவந்துநீ. கடை*

திட்டவட்டமுடன்...... ...தினமுன்பணிசெய்ய
திரவியமில்லாமல்......திகைத்துவாடுகின்றேன்
விட்டகுறையிதென்றால்... விடுமோவுனக்குப்பழி
வீரமுடனேயிந்த..............வேளையிற்காக்கநீ. கடை*

௩௩ - இராகம் - பைரவி - ஆதிதாளம்.

(பல்லவி)

அரகரமுருகேசனே..................இனியுந்தன்
அருள்புரிகுமரேசனே.........................*

(அநுபல்லவி)

சரவணந்தனில்வளர்...... ...சண்முகாகண்பார்த்துக்
குறவர்பெண்ணைமணக்கும்-குமராவந்தெனைக்காத்து அரக*

(சரணங்கள்)

சத்துச்சித்தானந்த..............நித்தியபரிபூரண
சர்வதயாபர..................... ......ஆதியகாரண

சுத்தநிர்க்குணமான ... ...சோதிசொரூபவர்ன்ன
சுயம்பிரகாசமான......... ...சுந்தரவடிவேலா. அரகர *

அந்தகாரமான......... ....இருள்தனையகற்றிட
அரிவையர்மேற்கொண்ட - ஆசையையறுத்திட
இந்தப்பிரபஞ்சத்தின்...... ... மாயைதுலைத்திட
இணையடிகண்டுநான்.........இப்போதிணங்கிட. அரக *

வஞ்சகச்சூரபத்மன் ... ...நெஞ்சந்தனைப்பிளந்து
வானவர்க்காகவே... ... ...வந்தேஅருள்புரிந்து
தஞ்சமென்றவர்களைத்..........தற்காத்திடநினைந்த
தற்பரனேயுனைக் ...காண்பதெப்போதறிந்து. அரகர *

*

௩௪-இராகம்-ஸ்ரீராகம்-சாப்புதாளம்.

(பல்லவி)

மதிமோசஞ்செய்யலாமோ.........முருகாஎன்
மதியைக்கெடுக்கலாமோ......... ....*

(அநுபல்லவி)

மதிமோசம்நீசெய்தால்... கெதிவேறெனக்குண்டோ
ததியானகாலத்தில்.........நிதியைக்கொடுத்திடாமல். மதி *

(சரணங்கள்.)

எத்தனைநாளிந்த.............. ...ஏழையின்மீதினில்
இதக்கமில்லாமலே ... வதைக்கநினைத்தையோ
அத்தனுக்குரைசெய்த...... ...அறுமுகவடிவேலா
அடியேனைக்காத்திட......அருளுனக்கில்லாதே. மதிமோ.

சுத்தநிராதார.............. ... சுயவெளிதன்னிலே
சும்மாயிருந்து... ... ... சுழுமுனையைக்கண்டு
வித்தகனேயென்றன் - வினையையொழித்துன்றன்
விரைமலர்த்தாளிணை - விரவிப்பணியொட்டாமல். மதி *

என்னால்முடியுமென்றோ-எம்பிரானுனைக்கேட்டேன்
இறைவனேநீசொன்ன- மறைமொழிபிசகுமோ
பொன்னையளிப்பதற்கு......உன்னால்முடியாதோ
பூரணனேபோரூர்க் ... ...காரணனேயெனை. மதிமோ

௬௫-இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

மதியைக்கொடுக்காயோ……………… முருகா நீ
மதியைத்தடுக்காயோ…………………… *

(அநுபல்லவி.)

மதியைக்கெடுப்பது…… விதிவசமென்றுசொன்னால்
மார்க்கண்டற்கருள்செய்த-மார்க்கந்தானும்பொய்யோ-மதி

(சரணங்கள்)

நிதியைப்பெரிதெனவே… நினைந்துநின்பணிவிட்டு
நிரந்தரங்கறங்குபோ… லுழன்றுமயங்குகின்றேன்
கதியானகாலத்தில்……… கதியைக்கொடுப்பதற்குத்
தந்திரநெறிசொல்லி…… வந்தெனையாளுவாய்.மதி *

கோபதாபமுற்றுக்… … …கொடும்பிணிக்காளாகிக்
குவலயந்தன்னிலே … … அலமாயழிகின்றேன்
பாபவழிசெல்லாமற்……… … …பாகதிதந்திடப்
பச்சைமயிலேறிப்…… பரிந்துவந்தெனையாண்டு.மதி *

சதிகாமினிகளைத்தித்……… ……சந்ததமுமிருந்து
சஞ்சலச்சேற்றிலே …… ……சறுக்கிவீழாமலே
பதியெனும்நிலையினில்……… நிதமுமிருந்துயிகப்
பரிவாகப்போயினை … ……பணியவந்தளனக்கு-மதி *

௬௬-இராகம்-பிலஹரீ-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஏனோவிந்தஅந்தரம் … … ……………உமக்
கென்மேல்தானோ…… ………………பேதம்

(அநுபல்லவி.)

வானோர்புகழுந்திருப்…… …போரூர்மருவுஞ்சீலா
வள்ளிநாயகியுடன்…… …… ……மகிழும்வடிவேலா

(சரணங்கள்.)

வஞ்சகரிணக்கத்தில்……… …வாடிவருந்தப்போமோ

சஞ்சலப்பட்டிடின்றால்...... ...சம்மதமுமக்காமோ
அஞ்சலென்றெனையாளும் ... அறுமுகவனேகேளும், என்னை*

அரிவையரின்பமதை...................அமுதமெனநினைந்து
பிரியமுடனருந்தும்... ... .பித்தனிலைவதிர்ந்து
தெரிவித்தருள்புரியத்....... ......தேவேயுளமிரங்காய்-என்னை

கல்லினும்வலிதான...... ... ... தெஞ்சங்கரையஇன்று
சொல்லுநல்லதிவொன்று - சோதியேயென்றுநின்று
வல்லவனேநல்கி......... ... மருவாதிருக்கின்றாய்-என்னை

———*———

௩௮-இராகம்-பந்துவராளீ-சாப்புதாளம்,

பல்லவி,

போரூரனைநினைந்தால்.........வேறோர்வருத்தமேது
புத்தியில்லாதநெஞ்சே.............................*

(அநுபல்லவி)

ஆரூரர்பரவிய...'... ... ...அறுமுகதேவனே
அறிவுருவாகவே... ...அகங்குழைந்தனுதினம். போரூ

(சரணங்கள்)

எங்கெங்குந்தானாக... ... .எழுந்தபரவெளியை
எண்ணத்தரிதான...... ....யென்குருநாதனை
பங்கயனைச்சிறையில்......... ...பதித்தபரஞ்சுடரை
பலநாளும்போற்றிநீ........பரவிப்பணிந்துருகி, போ

நித்தியகல்யாண................. நிரஞ்சனநிட்களனை
நிர்மலமான.............. ... ... நிராமயசோதியை
சித்தமொருமித்துச்...... ... ...சிக்கெனப்பற்றியே
சின்மயமோன......... ...சிதம்பரஞ்சென்றுநீ, போ

அம்பரமான........ ....அருட்பெருவாரியை
அகண்டபரிபூரண.............. ஆநந்தஜோதியை
மும்மலவிருளை............. ...முழுதந்தரத்திநீ
முத்தியெனும்பதத்தை ... ...நித்தமடைவதற்குப்-போ

௩அ. இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

சற்றாகிலுங்கருணை..................புரியாயோயெந்தன்
சஞ்சலமகன்றிட....... ....அருளாயோ

(அநுபல்லவி)

அத்தன்முதலாகிய..,.............. அரிபிரமாதிகட்கும்
அருஞ்சிறைதவிர்த்திடும்... ......அறுமுகவடிவேலா. சற்

(சரணங்கள்)

இருவினையாகிய... ....தளைதனைப்போக்கி
யிதமகிதத்தில்.....................இராமலையாக்கி
கருவெனுஞ்சென்மக்....................கடலினைநீக்கிக்
காமாதிமுதலான .... கன்மந்தனைத்தாக்கிச். சற்

காயத்தைமெய்யென்று... ... .கருதியுழலுதே
கனவெனுமுலகத்தைக்...... .....கண்டுமயங்குதே
மாயாவிநோதத்தில்... ... .மாறுதிமுக்குதே
மாசற்றவாநந்த...................மௌனநிலைதந்தே. சற்

முற்றுமழிவாயென்று... ...முன்னமேவகுத்தாயோ
மூதறிவினைமாற்றி...,.....முழுதுங்கெடுத்தாயோ
சித்தவிகாரத்...................திருக்கையொழியாயோ
சீர்மிகுபோரியில்...... ......வாழ்வுறத்தாராயோ. சற்

---

௩௯. இராகம்-பூபாளம்-சாப்புதாளம்.

பல்லவி.

கல்லோவுன்னெஞ்சம்...., ...கருணைபுரியாவிட்டால்
கர்த்தனேயென்ன......... ....செய்குவேன்

(அநுபல்லவி.)

அல்லலொழியேனென்றால்அடிமையுனக்கென்றபேர்
ஆமோசொல்...... ....ஆறுமுகநாதா-கல்

(சரணங்கள்.)

பல்லோர்பழிப்பதற்கோ...பாரிலென்னைப்படைத்தாய்
பாவத்துக்காளாகிப் ,,....பரதவித்துழல்கின்றேன்

புல்லறிவாகிமனம்...... ...புன்வழிதனித்தசென்று
புத்திநிலைநில்லாமல்...... ...மெத்தவருத்தமுற்றேன்-கல்

வல்லமைபேசிய........................ ஆணவவிருள்கணை
வாட்டியருணிலையைக் ... காட்டாதிருப்பதென்ன
சொல்லுதற்கரிதான............சுகமிதெனவருளுஞ்
சோதிமயமாகிய...... ......ஆதிமூலப்பொருளே-கல்

அந்தக்கரணமதை......... அடக்கியிருப்பமென்றும்
ஆசையெனும்ஆவேச...மோசத்தழுந்துகின்றேன்
சிந்தைமயக்கொழித்துன்...... ...சீர்பதந்தந்திடாய்
சிற்பரனேதிருப்.................. போரூர்முருகனே-கல்

௩௰-இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி,

என்னைவதறுமமக்... ....கின்பமோகுருநாதா
என்னசெய்குவேனையா............................

(அநுபல்லவி,)

உன்னைநினைத்தவர்க்கும் ...— ஒருகுறைவாராதென்று
உலகுரைபழுதாமோ..............உத்தமனேகர்த்தனே

(சரணங்கள்)

தன்னைத்தானறியாத ... .சந்நதங்கொண்டுபேசி
தாமேகளிக்கின்ற... ... சண்டாளர்தம்மையிப்போ
தன்னிடவேல்விடுத்து... ...உறுக்கியுள்ளங்கலக்கி
உயிரைவதைப்பதற்கும்... ... உரமிலையோபோரூரா. என்

பஞ்சமாபாதகத்துக்......... ......கஞ்சாதபாவிகளால்
பலநாளுநான்வருந்தி......பதைப்பதுனக்கழகோ
வஞ்சகச்சூரனை..................வதைத்துவானவர்க்காக
வந்ததுமெய்யானால் ... எந்தன்குறைதவிர்ப்பாய், என்

ஆங்காரக்கோபங்கொண்டு-அடங்காப்பிடாரியைப்போல்
ஆணவத்தாலழியும் ... .அசடருறவதனில்

நீங்காத்துயராமுற்று..........நித்தமுமழுகின்றேன்
நீலமயிலிமேலேறி...... ....நீவந்தருள்புரிவாய்-என்*

௪௧-இராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னசெய்குவேன்போரூரா......எளியேன்கன்மம்
எப்போதகலும் போரூரா........................*

(அநுபல்லவி,)

முன்செய்வினையிதென்றால்... மூளுமெனக்குப்பழி
முழுதுங்கெடுத்திடாமல் ... முன்னின்றருள்புரிவாய்-என்*

(சரணங்கள்.)

பத்தியுடனேசென்று ... பணிமலர்கொய்தவர்தன்
பாதந்தனிலேதூவி......... பரிவுடன்போற்றாமல்
முற்றிலுமறியுதே ....அவர்களுடன்மனது
முருகாவென்றொருதரம்...உருகேனென்றிழுக்குதேஎன்*

கற்றதுங்கேட்டதுங் ....கருத்துடனறிந்ததுங்
கடவுளடிமையென்ற... ....காரணமொழிப்படி
அத்தனேநின்பணியை-அன்புடன்செய்வமென்றால்
அத்தமில்லாமலின்னம் ....அலைவதுநீதமோ.என்*

காமவெகுளியாலே......... ... ...கபடுண்டிருக்கிறேன்
காலன்வந்தடியேனை ... கைப்பிடித்திழுக்குமுன்
ஓமக்கனல்வளர்த்தி.......... ...புணர்விலுடனிருந்து
உன்னைவிட்டகலாத ... ...உண்மையருள்புரிவாய்.என்*

௪௨-இராகம்-மத்தியமாவதி - ஆதிதாளம்-

பல்லவி

கல்லாகிலும்மூச்சு.................. விடுமிஐயாயெந்தன்
கனவில்வந்தொருபேச்சுச்சொல்லையா.............*

(அநுபல்லவி.)

வல்லவனே திருப்............. ...போரியில்வாழ்கின்ற
வானவர்க்கருள்செய்த... ... . ஞானசற்குருபரா

(சரணங்கள்)

பொல்லாதவனெனுஞ்...........சூரனைக்கோபித்துப்
போர்புரிந்தவனைநின்......பொன்னடிக்காக்கினாய்
நல்லானென்றுனைநிதம்...... ...நாடிப்பணிவோர்க்கு
நாதாந்தமுடிவினில்... ... ...நடம்புரிநாதனே-வல்*

அருணகிரிநாதருக்...... ... ... கருட்குருவாகவந்து
அஞ்சாதிருவென்று ....அனுக்கிரகஞ்செய்தவா
கருணைக்கடலேயென்றுன் ...கழல்பணிந்துருகாத
கன்மத்துக்காளாகின...... ...காரணமிதுவென்ன-வல்*

நக்கீரனுரையாமுன் ... நயந்துவேல்விடுத்தோனே
நான்மறைமுடிவினை ... நவின்றருள்புரிந்தோனே
பற்பலவிதத்திலும்......... ...பரதவித்தென்மனது
பதைக்கின்றதென்னமோ ... ... பரிபூர்ணநாதனே-வல்*

௪௩-இராகம்-சஹானா-சாப்புதாளம்.

பல்லவி.

அரைக்கணமாகிலும்... ... .அமலன்றிருவடியில்
அமர்ந்திருப்பாய்நெஞ்சே...........................*

(அநுபல்லவி,)

விரைக்குழலார்மயக்கை... ... ...விட்டுமகிழ்வுடனே
விமலன்றிருவருளை......... ...விரும்பிப்பணிவதற்கு

(சரணங்கள்.)

மூவாசையெனும்வேரை......முழுதுங்களைந்துவிட்டு
மூர்க்கமெனும்பகையை முழுதுந்துரத்திவிட்டு
தேவாசைகொண்டவரைத்... ... தேடிப்பணிபுரிந்து
தியங்காமலாநந்தத்...... ... தேனமுதுண்பதற்கு-அ*

காமமெனும்பிணியால்...... ... கலங்கிவருந்திடாதே

கன்மவினைவழியிற்.......கருத்தைச்செலுத்திடாதே
ஓமக்கனலெழுப்பி..................யோடாமலேநிறுத்தி
ஓங்காரத்துள்ளே........ ......ஒடுங்கிமகிழ்வதற்கு- அ*

சஞ்சலமெனும்வாழ்வைச் ...சவிதியிலேயொழித்துச்
சற்பனைசெய்பவரைச்..............சாராமலேயகற்றி
அஞ்சலென்றவர்களை ....ஆதரித்தாண்டிடும்
அருள்மிகுபோரூரனை ... அன்பாய்ப்பணிவதற்கு- அ*

௩௬-இராகம்-பில்ஹரி-சாப்புதாளம்

பல்லவி.

ஆசைகொள்ளுவாய்-நெஞ்சே... ...போரூரன்மேல்
ஆசைகொள்ளுவாய்-நெஞ்சே........ ....*

(அநுபல்லவி)

ஆசைகொண்டவன்பணி ....அனுதினம்நீசெய்தால்
அல்லலொழிந்து................அசைவற்றிருக்கலாம்- ஆசை

(சரணங்கள்)

தேசதேசமெங்குந்..................தேடிபுழன்றிடாதே
தெரிவையரின்பத்தில்.........தினமுமழிந்திடாதே
வாசவனையெதிர்த்த............. ......வஞ்சகச்சூரனை
வாட்டிவதைசெய்த........ ......வானவனைக்காண- ஆசை

நிலையில்லாக்காயத்தை..............நிலையெனநம்பாதே
நீநானென்றுசொல்லி..........நிலைபிரிந்தலையாதே
அலைவற்றவருளத்தில்... ... .அமர்ந்துவிளங்கிய
அருள்வடிவாகிய ... .ஆனந்தக்கூத்தன்மேல்- ஆ*

சங்கித்திருந்துநீ...................சஞ்சலமடையாதே
சத்தியநெறிதப்பி..............சமர்செய்பவராதே
எங்கெங்குந்தானு... ... ...யிலங்கியநாயகன்
எம்பெருமானு... ... ...எழுந்தகுருபரன்மேல்- ஆ*

௫௬-இராகம்-காப்பி-சாப்புதாளம்.

பல்லவி,

நோக்குவம்வாராய்-முருகனே-நோக்குவம்வாராய் ...*

(அநுபல்லவி,)

நோக்குவம்வாராய்...... ......நொடிநேரமாயினும்
நோயினுக்காளாகி...... ... .நொந்துவருந்தாமல்-நோ

(சரணங்கள்)

நோக்காமல்நோக்கி......... ....அவனை நீ
நோகாமற்றூக்கி.......................*
ஆக்கவுங்காக்கவும்,.............அழிக்கும்அருளுடைய
ஆனந்தமான......... ....அருட்பிரகாசனை-நோ*

அஞ்சாமல்நின்று.......... .....ஐம்பொறிகளுந்
அஞ்சாமல்வென்று......... ....*
வஞ்சகமாகவே.................. .....வந்திடுஞ்சூரனை
வாட்டிவதைத்த ....வடிவுள்ளவீரனை-நோ*

சும்மாயிருந்து............... ....சுகமதை
அம்மாஅடைந்து............ ... .*
பெம்மானைக்கண்டு......... ...பேசாமற்பேசியே
பேதமாகாமல்...... ....பேதமதாகவே-நோ*

௫௭-இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி,

வரவேணும்ஐயா-இனியாகிலும்-வரம்அருள்மெய்யா*

(அநுபல்லவி.)

அரவமணிந்தில்லை........ ... ...அம்பலவாணனருள்
அகமகிழ்ந்திடவந்த... ....அறுமுகவடிவேலா-வர*

(சரணங்கள்)

இரவும்பகலுமுனை ... யெண்ணித்துதிப்பமென்றால்
யேந்திழையார்மயக்கில் ......யிருத்திவதைக்குதே
குறவர்குலமங்கைதனைக்......... ... ...கூடியணைகின்ற
கோதிலாவானந்த....................மாகியதேவனே-வர*

அச்சம்அபிமானம்...............அநுதினம்வாட்டுதே
அறிவெனக்குமயங்கி......... ...அசடாகநிற்குதே

பச்சைநிறமுடைய... ... ..பார்த்தாமன்மருகோனே
பக்ஷம்வைத்தடியேனைப்... பாதுகாத்தருள்செய்ய-வர ❋

மாயாவிகாரமெனும்......... மயக்கம்விடேனென்று
மாறிமாறியென்னை.......,...... மறித்துவதைக்குதே
பேயாயுலகத்தில்......... ... ...பேசாதிருக்கவொரு
பேரின்பமெனுமோனம்-பெம்மானீயருள்செய்ய-வர ❋

—3*ɛ—

௰௯-இராகம்-சுருட்டி-சாப்புதாளம்.

பல்லவி

வள்ளிமனோகரா........................ யெளியேனுக்கு
வந்துன்னருடாராய்............... ....❋

(அநுபல்லவி)

புள்ளிமயிலிலேறும்...... ... ...புனிதசற்குருபரா
பொன்னுலகர்பரவும்.........போரூர்நகரில்வாழும்.வள் ❋

(சரணங்கள்)

எள்ளுக்குளெண்ணெய்போல் -எங்குந்நிறைந்தவனே
ஏகபரிபூரணா............. ... ...என்குருநாதனே
உள்ளும்புறம்புமா...... ...வொருமித்துனதடிக்கீழ்
ஒருகணமாகிலும்... ......இருக்கஎனக்கருள்வாய்-வள் ❋

அண்டர்கள்முனிவர்கள்...... ......கண்டுபணிந்திட
அரனார்மகிழ்ந்தளித்த... ......ஆறுமுகதேவனே
தொண்டுசெய்யுமடியேன் ... ...துயரத்தைநீக்கியே
துரிதமாகிவந்துன்றன்... .... திணையடிதருகுவாய்வள் ❋

நக்கீரர்க்காகவே ...,.. ...நயந்துவேல்விடுத்தோனே
நாரணர்க்கன்பான.. ....நல்லமருகோனே
அர்ப்புதமாகவே.......... ... அமர்ந்தமுருகோனே
அல்லல்தனையொழித்து ...அடியேனைக்காத்தருள்.வள் ❋

—3*ɛ—

௧௭-இராகம்-கேதாரகௌளம்-சாப்புதாளம்.

பல்லவி.

இந்தமோசஞ்செய்யலாமோ.. ... .ஸ்வாமீயினி
யெந்தனுக்கென்னகெதியாமோ........... ......*

(அநுபல்லவி)

சந்ததமுன்றிருச்.....................சரணாவிந்தத்தை
யெந்தனிருதயத்தில் ....எண்ணிப்பணியொட்டாமல்-இந்*

(சரணங்கள்)

அந்தகாரமென்னும்..................இருளிலகப்பட்டு
அகங்காரகோபவழி............மானத்திலிடிபட்டு
நிந்தைக்கென்னைவிடாமல்... ... நீணிலத்தினில்வந்து
உன்றன்றிருவருளை... ......புவப்புடனளியாமல்-இந்*

சிந்தைமயக்கமுற்றுச்... ....சிரித்திடவுலகத்தில்
என்றனைப்பிறப்பித்தற்... ...கென்னபலனுமக்கு
வித்தைமயிலிலேறி.............விரைவில்வந்தாளாமல்
பந்தத்தழுத்திவிட்டுப்......பார்ப்பதுனக்கழகோ-இந்*

ஐந்தொழில்களுருமம்... ......தென்றுமறைமுடிவில்
அறையுமொழியதனை... .....அசத்தியமாக்காமல்
இந்தச்சமயம்விட்டு... ... . எந்தச்சமயங்காக்க
எண்ணியிருக்கின்றீர்...... .....என்குருநாதனே-இந்*

௧௮-இராகம்-சவுராஷ்டிகம்-சாப்புதாளம்.

பல்லவி

அடுத்துவந்தேனையா............. ....முருகாவுன்றன்
அடிமிசைவீழ்ந்தேனையா... ....*

(அநுபல்லவி)

கொடுத்தென்னைக்காவாமல்......சோதனைபுரிந்திட்டால்
குவலயந்தனிலென்றன்-...குறைதவிர்ப்பாருண்டோ-அடு*

(சரணங்கள்)

கங்கையணிசடையர்.......... .....கண்டுகளிக்கின்ற
காரணனேபரி.......................பூரணமாகவே

யெங்குநிறைகின்ற...... ....யென்குருநாதனே
யெண்ணற்கரிதான... ... ... ஏகபரவெளியே-அடு*

நித்தியானந்த......... ....நிமலஸ்வரூபனே
நிஷ்களமாக...... ... .நிறைந்திடுந்தேவனே
சற்றுநினைத்துளம்................உருகியவன்பர்க்குச்
சஞ்சலநீங்கச்...... ...,. ...சரணமளிப்போனே.அடு*

சுத்தவசுத்த.......... ... .மெனுமிரண்டில்லாத
சுகாதீதமாக... ... .நிறைந்திடுஞ்சோதியே
முத்தர்பரவு.......... ......முதலேதென்போரியில்
மூதறிவாக... ....விளங்கியதெய்வமே,அடு*

—————

௩௬-இராகம்-சங்கராபரணம்-சாப்புதாளம்;

பல்லவி.

கருணைசெய்குவாயையனே...... .....இனியாகிலும்
காப்பாற்றவேணுமெய்யனே............. ....*

(அநுபல்லவி)

தருணமிதுவேயென்றன்தயக்கையொழித்தின்னேரம்
தயைபுரிந்தடியேனைத்... ...தடுத்தாளுவதுன்பாரம்-கரு*

(சரணங்கள்)

உதவிசெய்குவாரில்லை......... ...உலகினிலுனைவிட
உத்தமனேவேறு.. ... திக்குண்டோசொல்லுவாய்
சதமில்லாவாழ்வினைச்...............சந்ததமுங்கருதி
சஞ்சலப்படுவேனோ...... ...சண்முகதெய்வமே. கரு*

விழலுக்குமுத்துலை.........யிட்டிறைத்தவன்போல
வீணாக்கூடியே ....காலங்கழிக்கின்றேன்
அழலுக்குள்வெண்ணெய் ... போலுன்திருவடிக்கீழ்
அகங்குழைந்தநுதினம்...!...அசைவறவிருந்திட- கரு*

தஞ்சமென்றவர்க்கெல்லாம்-அஞ்சலென்றருள்வோனே
தற்பரமூர்த்தியே,.............யற்புதனேயடியேன்

பஞ்சையைப்போல்திதம்...... பாரிலிருந்துழன்றால்
பார்ப்பார்நகைப்பார்... ... பழிவரும்போரூரா-கரு*

௯௰-இராகம்-பரசு-சாப்புதாளம்,

பல்லவி

வருத்தமறிகிலையோ.......... ... ...அம்மணியுந்தன்
வஞ்சகந்தீர்கிலையோ.......... ....*

(அநுபல்லவி)

கருத்தின்படிமுடித்தென்...கவலையொழித்திடாயோ
கந்தன்மகிழும்பாரி...... —......யெந்தனையாசரி- வரு*

மாலயன்றேடிய..................அரனூர்மருவுகின்ற
மாசிலாவுமையவள்................மகிழுமருமகளே-வரு

பொன்னுலகோருடன்... ... ...போராமிஞ்ஞானைப்
பொங்கமுடன்றணித்த யெங்கள்குருவின்றேவி-வரு*

நாலுவேதமுடி.......... ... .வாகியிருப்பவளே
நாதாந்தத்துட்பொருளே... ...நாதன்மருமகளே-வரு*

௯௧-இராகம்-சுருட்டி-சாப்புதாளம்.

பல்லவி

இத்தனைபகையேதையா.......... ...உமக்கென்மீதில்
இத்தனைபகையேதையா........................... ...*

அநுபல்லவி

சற்றுந்தயையில்லாமல்-சதைத்தென்னைக்கொல்கிறாய்
சங்கையறுத்திடாயோ ... ...சண்முகதெய்வமே- இத்*

சரணங்கள்

சித்ரக்கதைகள்பேசிச்... ... செருக்குடனிருக்கவோ
சிந்தைகலக்கமுற்று... ... ... வெந்துதணியவோ
வெற்றிமயிலிலேறி............... ...விளங்கியநாதனே
வெய்யவினையொழித்தே...ஐயாவென்னையாளாயோ-இத்*

பொன்னைநினைந்துருகிப்......... ...போராடிநிற்கவோ
பொல்லாதவருறவில்... பொருந்திநான்வாழவோ
என்னவிதஞ்சொல்லியும்... ...இரக்கமுனக்கிலையோ
ஏகபரம்பொருளே......யினியாகிலுங்காவாயோ- இத்*

வஞ்சியரிணக்கத்தில்...............மிஞ்சியிருக்கவோ
வல்லவனென்றுதான்...... ... வாங்காமலழியவோ
சஞ்சலநீக்கிச்...... ... .சரணமடையவோ
சமரபுரியில்வாழும்...... ... குமரகுருபரனே-இத்*

சூஉ-இராகம்-முகாரி-சாப்புதாளம்.

பல்லவி

கண்டேன்கண்டேனே......... ....முருகனைக்
கண்டேன்கண்டேனே.................... ... ...*

அநுபல்லவி

அண்டர்பரவிய............ ...போரூர்தனில்வாழும்
ஆநந்தமாக......... ... ... நடித்தபொற்பாதனைக்-கண்*

சரணங்கள்

சண்டைக்கெதிர்த்தவெஞ்.......... சூரன்கிளைகளைச்
சற்றும்வையாமலே... ...வெட்டித்துணித்திட்டுத்
தொண்டர்க்கினிதருள்......... ...செய்திடுநேயனைத்
தோகைமயிலேறி...............வந்திடுந்தூயனைக்-கண்*

பந்தப்பகைகளைப்...... ... பற்றறச்செய்வோனைப்
பாவையிருவர்............... .....மகிழுமணாளனைச்
செந்திநகருறை.....................செங்கல்வராயனைத்
தேடவரிதான.............. ... தேசிகமூர்த்தியைக்-கண்*

நச்சரவம்பூண்ட......... ... ... நாதன்மகிழ்வோனை
நாதன்மறையின்முடி............. வாகியசெல்வனை
அச்சுதனுக்கினி............... ... ... தானமருகனை
அம்பிகையீன்ற...............அறுமுகவேலனைக்-கண்*

௩௬-இராகம்-சங்கராபரணம்-சாப்புதாளம்.

பல்லவி

எதிர்க்கிறாயென்னநெஞ்சே.... ......அநுதினமும்
எதிர்க்கிறாயென்னநெஞ்சே..... ....*

(அநுபல்லவி,)

எதிர்த்தென்னசொன்னாலும்... ...ஏனோதடுக்கிறாய்
எந்தைகுருபரனை...... ...யேத்திப்பணியேனென்று-எ*

(சரணங்கள்)

கொடுங்கோபஞ்சொல்கிறாய் - கொலைசெய்வேனென்கிறாய்
கொம்பனையார்மயல்...............கொண்டுதவிக்கிறாய்
விடுவேனோவுனையென்று...............வீம்புகள்பேசுறாய்
விமலன்றிருவருளை... ... .விரும்பாதிருக்கிறாய்-எ*

சத்துருவாகவே...... ....யென்னைநினைக்கிறாய்
சங்கடமான................விகற்பங்கள்செய்கிறாய்
சித்ரவிசித்ரக் .. ..கதைகள்படிக்கிறாய்
சீரழிந்தேனோ... ... . திகைத்துவருந்துறாய்-எ*

வருகவென்றழைத்தாலும்...... ...வாராதிருக்கிறாய்
வம்புக்கிழுத்தென்னை...... ...வாட்டிவதைக்கிறாய்
திருவளருஞ்சம........ ....ராபுரிச்சேவகன்
திருவடிசாக்ஷியாய்த் ... .தினமும்நடவாமல்எ*

௩௭-இராகம்-பந்துவராளி-சாப்புதாளம்.

பல்லவி.

என்னசொன்னாரோ.................. நெஞ்சே-உனக்
கென்னசொன்னாரோ... ....நெஞ்சே

(அநுபல்லவி,)

என்னசொன்னாரோபோரூர் ...முருகரிணையடிக்கீழ்
இருந்துபணிபுரிய...........எனைவரச்சொன்னாரோ என்*

(சரணங்கள்.)

சொன்னசொல்லின்னதென்-றென்னுடன்சொல்லாமல்
சொப்பனந்தன்னிலும்.........அவனைநினையாமல்

என்னதெனுமபி......... ...மானங்கழலாமல்
ஏனிப்படிநிதம்.........என்னைவதைக்கிறாய்-என்

மட்டுப்படாத... ... . மயக்கத்திலேநிதம்
மாறுபாடுசெய்து......... ... மல்லுக்கிழுக்கிறாய்
விட்டசுகத்தை......... ... ... விரும்பியலைகிறாய்
வீணாகநாளெல்லாம்.........விழலுக்கிறைக்கிறாய்-என்

காமக்குரோதலோப... .... மோகமதத்தினில்
கட்டுண்டுவாடிக்......... ... கலங்கிடச்செய்கிறாய்
நேமநிட்டையெனும்......... ...நிலைதனைவிட்டு
நில்லாதவாழ்வை.........நிசமாநினைக்கிறாய்-என்

௩௦-இராகம்-மோஹநம்-சாப்புதாளம்.

பல்லவி

சொன்னேன்சொன்னேனே...என்றுயரத்தைச்
சொன்னேன்சொன்னேனே.........

அநுபல்லவி

பொன்னைக்கொடுவென்றால்...இன்னங்கொடுக்காமல்
போராட்டஞ்செய்யாதே.........போரூர்முருகனே-சொ

(சரணங்கள்)

மக்குமுலகினை......... மெய்யென்றுநம்பியே
மாறுமலென்னுடன்......... ... வாதுபுரியுதே
தங்கமயின்மிசை... ... .ஏறியநாதனே
தந்தைக்கருள்செய்ய.........வந்தசற்போதனே-சொ

கண்டபொருளைக்......... ....கருதியழியுதே
காமன்கணையினிற்......... ...கட்டுண்டுவாடுதே
தொண்டர்பரவிய......... ... தாமலர்த்தாளனே
தோகையிருவர்.........மகிழுமணாளனே-சொ

அந்தக்கரணம்......... ... அடங்காமலின்னமும்
ஐந்துபுலன்வழி......... ...தன்னிலிழுக்குதே

தந்திமுகவற்............. .....இளையசெவ்வேலனே
தற்பரனான.....................தனிச்சிவ்பாலனே-சொன்.

௯௯-இராகம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி

கொண்டுவாமயிலே.....................முருகனைக்
கொண்டுவாமயிலே.................... ... .*

அநுபல்லவி

தொண்டர்க்கினிதருள் .... செய்திடுந்தூயனைத்
தோகையிருபேர்.................தொழுதிடுநேயனைக்-கொ

சரணங்கள்

முப்பத்துமுக்கோடி..............தேவர்பணிகின்ற
மூதறிவாகிய............ ... ...பேரின்பவாரியை
அப்பனுக்கருள்செய................ வந்தகுருபரனை
ஆறுமுகமுடைய,............ஆனந்தக்கூத்தனைக்-கொ*

அந்தகனையுதைத்த........... ...அரனார்மகிழ்ந்தளித்த
அமலவொளிவெளி......... ... ...யாகியதேவனை
யிந்திரனுக்கினி...................... தானமருமகனை
யிப்புவிதன்னி..............விரைந்துசிப்பணிந்திடக்- கொ

பவத்தொழில்களையெல்லாம்... பற்றறச்செய்வோனை
பரிவுடன்தொழுவோர்க்குப் ...பாதமளிப்போனை
உவமையில்லாதபோ...... ...பொன்போரூராயனை
உண்மைதவறு...............திருவிப்பணிந்திடக்-கொ*

௯௭-இராகம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி

கடைக்கண்பாராயோ.........................முருகேசா
கலக்கத்தைத்தீராயோ:..............................*

அநுபல்லவி.

விடத்தையுகந்தமுதா ... ..யுண்டவனருள்பாலா
  விண்ணவர்க்கருளிய ... ...வித்தகவடிவேலா-கண்ட *

சரணங்கள்.

கடையவனென்றவனியோர் ... ,... கருதியேசிடலாமோ
  காமன்விடுங்கணையால்...........கருத்துமயங்கலாமோ
நடைதடுமாறியே......... ......நலிந்திங்குழலலாமோ
  நாதனைமுறையிட்டும்..... நாடாதிருக்கலாமோ-கடை *

அடுத்தவர்துயரத்தை...............யகற்றியருள்புரியும்
  ஆறுமுகதெய்வமே..................யதுவுநிசமலவோ
கொடுத்தெனைரக்ஷியாமல்... கொடுமைபுரிந்துவிட்டால்
  குவலயந்தனிலுள்ளோர்- குற்றமாயுனைச்சொல்வார்-கடை *

செழிந்தமலர்ப்பொழிலுஞ்... செய்ய மணிமேடையுந்
  திவ்வியமலர்வாவியும்... ...... திகழும்போரூரானே
அறிந்துமறியாதுபோ........ ... லாண்டவனீயிருந்தால்
  ஆரென்னையாதரிப்பா ...ரதுவாகிலுஞ்சொல்வாய்-கடை *

௫௮-இராகம்-மத்திமாவதி-சாப்புதாளம்.

பல்லவி.

ஐயனேவாராய்........... ....எனக்குநின்
னருட்பதந்தாராய்.................... ....*

அநுபல்லவி

பையரவம்பூண்ட.............. ....பரமனருளிய
  பாலனேதென்திருப் ... போரிவாழ்வேலனே-ஐய *

சரணங்கள்

அஞ்சனந்தீட்டிய ... ... வேல்விழிமாதரை
  யன்புடனேகண் ... ... டறிவுநில்லாமலே
மிஞ்சியகாம ... ... வெகுளிமயக்கத்தின்
  மீளாமலேநித ... ... மூழ்கியலையாமுன்-ஐய *

வெய்யவினையி ... ... லழுந்திமனமது
  வெறிகொண்டவன்போல... ......வேசாறியேநின்று
உய்யும்வகையை... ... ... யறியாமலேயிந்த
  உலகமயக்கி ... ... லுழன்றலங்காமுன்-ஐய *

அந்தக்கரண ... ... மடங்காமல்மீறுதே
ஐந்துபுலன்வழி ... சென்றுவதைக்குதே
தந்திரஞ்செய்து ... ... தவித்திங்கலையுதே
தானெனும்வீரங்கள் ... ... பேசியழியுதே-ஐய*

பொன்னாசைகொண்டு...... ...பொருந்தாமனத்துடன்
போராடிநின்று ... புலம்பித்தவிக்கவோ
என்னாற்படமுடி ... ... யாததுயரத்தை
யிப்போதகற்றி ... யினிதருள்செய்திட-ஐய*

௬௯-இராகம்-

பல்லவி.

வேலாவுன்னிட ... ... சிலவடியவர்-நின்
கோலமதைத்தெரிகுவார் ... ... ஓ-வடி-வேலா*

அநுபல்லவி

காருநீரோயையா ... ... கவலைதெரியாதோ
பாருங்கடைக்கணர்தோ ... ஓ-ஓ-ஓ-வடி-வேலா

சரணங்கள்.

தன்னையறியாததோர்...... ...சன்னதங்கொள்மானிடர்
தானடைவதுஞ்சுகமா-நார்க்கிது தானடைவதுஞ்சுகமா
உன்னதமாகிய............ ....உயர்குருநாதனை
ஓதவாநெஞ்சே...... ...உண்மையென்றே-ஓ-வடி-வேலா*

௭௰-இராகம்

பல்லவி.

ஸொருபஜீவனம்...............ஜோதிபூஷிணம்-குஹா
கிர்பாசாகரஞ்கிதலோலனம்-அஜவாஹன ... .*

அநுபல்லவி.

தெஜசோதர......................நிஜசொருபமா-குஹா
சாந்தரூபசர்வலோல......... .. ...சகலதேவ-பூபா

சரணங்கள்.

தாரணுதியோகமூல..................தற்பரனருள்பாலா
காரகாரியே ... ...தாழ்விலாதவா
தாள்தந்திடு ... ...தடையற்றெனை
தாதாமயில் ... ...வாஹா-குஹா-சொருப

௬௧-இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

எந்தவிடத்தினிலிருந்துவிட்டீரோ.........ஸ்வாமி
என்னைமறந்துவிட்டாலென்னசெய்குவேன்ஸ்வாமி

அநுபல்லவி.

கந்தமலர்க்குழலாள்.....................தேவசேனையை
கல்யாணஞ்செய்த......... ......இன்பக்களிப்பாலோ-எந்த

சரணங்கள்.

வானவரைவாதிக்க.......... ....வந்தவெஞ்சூரனை
வடிவேலெறிந்துகொன்ற... ... .மகிழ்வாலோ
கானக்குறமகளைக்...... ... .கண்டுமனந்ததாலோ
கவலையொழிப்பதற்குக்...............காலமிதுவேலனே-எந்த

௬௨-இராகம்-அடாணா-ஆதிதாளம்,

பல்லவி.

உலகந்தனிலேஉயர்தெய்வமாயுனை நிலையாகவேகண்டு
நேமித்தவரெவரோஉலகந்தனிலே ... ...*

அநுபல்லவி.

நிலத்துன்பணிசெய்து ... ... நிஜமாகநம்பியும
மனக்கவலைகள்கொண்ட...... மயக்கந்தெளியிலையே- உலகந்

சரணங்கள்.

சரணமுதற்பொறிகள் ... ... கட்டளவக்களித்துஞ்
சரணமெனவுமுந்தன்... .... ருளையடைகிலேயே
தருணமிதுவேஐயா ... ... தயாநிதியேபோரூர
பரமனளித்தசா ... ... வணபவனேயுனே-உலகந்*

௬௩-இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

தப்பிப்பிழைப்பதுஎந்தன் - தரமாவேலா-உலகில்

அநுபல்லவி

செப்பிளமுலையார்...... ....தடாகச்
சேற்றிலழுந்தியுழைத்திடாமல்...... ....தப்பி*

சரணங்கள்.

காமவெகுளிவலையிற்பட்டுக்கனதனத்தினில்விழைவுறாமல்
ஓமத்தியையுள்ளேமூட்டி...உண்மையாகஉருகிநிற்க-தப்பி*

நாமரூபச்செய்கையற்ற...... ....நாகரீகமானவா
நான்மறைமுடிவாயிலங்கு ... ...நாதனானநாயகமே-தப்பி

சாதிபேதமற்றுநின்ற... ... .சமரசசபாவமான
சாந்தமாகஉண்ணிறைந்த ... ...சாமிபோரிநாதனே-தப்பி

௩௪-இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்

பல்லவி.

என்னடிமைகொண்டையா-எளியவனென்றதிர்ந்தும்-என்னடிமை*]

அநுபல்லவி.

என்னடிமைகொண்டுவிட்டீர்.....இவ்வுலகோர்பழித்திட
ஆனாலுமிப்படிநீர்... ஆட்டிப்படைக்கலாமோ-என்னடிமை

சரணங்கள்

பெண்டொனுந்தளையைப்......பிரித்துவிடாமலின்னம்
பிணக்குத்திருப்புடனே ...பேதித்துழலுவேனே-என்னடிமை

கட்டுக்கடங்கிடாத...... ... ...கசடனென்றேயதிர்ந்தும்
கடவுளேநீரிந்தக்........ ...காலமறிந்திடாதே-என்னடிமை

நன்னடக்கையில்லாத ... ...நானென்றிருக்குமென்னை
நாயகனேதிருப்...... ......போரூர்முருகனே-என்னடிமை

௩௫-இராகம்-தோடி-ரூபகதாளம்

பல்லவி.

வாரும்வாரும்எந்தன்வறுமைதீரும் ... ...ஸ்வாமி

அநுபல்லவி

காருமடியனே...... ....திகழ்கருணைவாரியே-வாரும்

சரணங்கள்.

ஆருமில்லையே............யெனையாண்டுகொண்டிட
பாருமையனே...... ......யுன்தன்பாதந்தந்திட-வாரும்*

நான்முகன்றனை ... ... வென்றநாதநாயகா
மானளித்திடும்பெண் ... மானுகந்தவா-வாரும்*

தோகைவாகனஅன்பர் ... அதிகரும்பூரணா
வாகைவேல்வாஎன்னை ... .வந்துவிலாண்டிட-வாரும்*

௬௬-இராகம்-சாரங்கா-சம்பைதாளம்.

பல்லவி.

நின்னடியையன்றலகோர்-நிரந்தரமுஞ்சொல்மொழியை
நிலைபெறவேவகையாக்கும்.............நிமலபரவெளியே

சரணங்கள்

அன்னைதந்தைநீயெனவே ... அடிபணிந்தேன்என்தனிட
அல்லலெனும்பவமதனை... ......அகற்றியருள்முருகா-நின்*

என்னையொருபொருளாக ... எண்ணியேன்ஆட்கொண்டீர்
எல்லோரும்பழிப்பதுனக்... ...மீகச்சலவோ-ஸ்வாமி-நின்*

பொன்னுடர்போற்றுகின்ற...... ......போரூரில்வாழ்குமரா
போதுமிந்தவாதனையின் ......போராட்டந்தீர்ப்பாய்-நின்*

௬௭-இராகம்-தர்பார்-ஆதிதாளம்.

பல்லவி

எவ்விதமாவுனை....................எண்ணுவதோ-முருகா
ஏகபரிபூரணஎன்தன்தயாநிதியே.....................*

அநுபல்லவி.

பவ்வத்தழுந்திநிதம்.........பாதவித்துழல்கின்றேன்-எவ்வி*

சரணங்கள்

பொய்வாழ்வினையகற்றி...... ... ...போதவறிவில்லாத
போராட்டம்புரியுதே ... ...பொல்லாங்காகியமனம்
மெய்யனேதிருப்போரூர்...... ......மேவியகுருநாதா
உய்யும்வகையில்லாமல் ...உழல்வதுனக்கழகோ-எவ்வி*

௬௮-இராகம்-சஹானா-ரூபகசாப்புதாளம்.

பல்லவி.

பார்க்கப்பெற்றேனேஉம்மைநான்... ... .*
பணிந்துநின்றேனே ... ... முருகா

அனுபல்லவி.

தீர்க்கமாகமயிலின்மேல்நித்திருத்திஎன்னையடிமைகொள்ளப்-பார்க்க*

சரணங்கள்.

அயனும்-அரியும் ... . அானுந்தேவர்
அறியொணாத ... ... வடிவலனே-பார்க்க*

தியக்கமாக ... ... உலகந்தன்னில்
தினமும்வாடிஉழலுகின்றேன் ... ... பார்க்க*

நித்தியமானபூதிதன்னில்......நின்றுருகும்அன்பருக்கு
சத்தியமாய்நெறியளிக்கச் சண்முகமாவந்தவனே-பார்க்க*

பத்தியுடனின்பதத்தைப்... ...பணியாஅடியேனுக்குச்
சித்தமகிழ்ந்தினியருளுஞ் ... சிங்காரவேலவனே-பார்க்க*

௫௯-இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

சகல்புவனதேவா............. ... எளியவனுக்குச்
சாயுச்சியமளித்திடநீவா.............. ....*

அனுபல்லவி.

சகலபுவனகர்த்தா...... ....வாகயிருந்தெனக்குச்
சமரசமருள்போதா......... ......எளியனுக்கு-சமர*

சரணங்கள்

கியானமடைந்தார்சிலபேர்...... ....உணமறந்தக்
கியானமடைந்தார்சிலபேர்................. ....*
தியானித்தவர்வினையைத்............தீர்த்தருள்புரிகின்ற
தயாநிதியேதிருப்... ....போரூர்முருகேசா-சகல*

௬௰-இராகம்-ஆரபி-ஆதிதாளம்.

பல்லவி.

வடிவைக்காணவேவேணும் ... கண்டாலுனது
வல்வினைதீருங்காணும் ... ... *

அநுபல்லவி.

அடிமைப்படைத்தவனை ... ஆண்டருள்செயுநேசன்
ஆண்டவன்திருப்போரூர்த் ...தாண்டவம்புரிவாசன்
கொடுமைகள்செய்திடாமற்கொண்டனைக்கும்உல்லாசன்
கோலமயிலிலேறுங் ... குமாரக்கோட்டத்திலீசன்-வடி

தடமகுடமுடிகள்படபடெனப் ... பணியும்பாதன்
சார்வதாநீதன் ... ... *
மடமிகுமசுரர்கள்பொடிபட ... அயில்விடுநீதன்
ஆனந்தபோதன் ... ... *
இடமிகுதனுகாணபுவனபா ... மெனுநாதன்
போகவதீதன் ... ... *
இலகுதற்சொரூப ... ... முனிவரர்தந்த்ரன் *
மலமொழித்தவர்கள் ... மதியுறைசந்த்ரன்
அடிநடுமுடிவெனு ... ... மாறுங்கடந்து
இடமிகுபுவிதனி ... லுளுந்தொடர்ந்து
ஞானவந்தணர்கணேச ... ... முயர்கீர்த்திபெற்ற
மோனமந்திரவிலாசமறை ... ... பூர்த்தியுற்ற
கொற்றவர்பணிந்துயரு ... நற்றவமிகுந்தடையப்
பெற்றவர்களுக்கினிது ... சித்தமகிழத்தனது
வீறுபாதமேபுரியும் ... ... கூறுஞானசாதனமும்
வேறிலாததேவதேவன் பேறருள்மஹானுபாவன்-வடிவை *

சரணங்கள்.

அம்பலத்தாடியபாதன் ... சிற்பரநாதன்
அருமாமறையினும் .. ... ஒருநாயகனெனும்
ஆனந்தமானபோதன் ... ... *
அமலவந்தணரொ ... ... டமரர்கள்வெகுவித
நிமலநிர்விஷய ... ... நித்தியபரிபூரண
அழகியவடியவ . ...ருளமதிலுறைரு
பழமெனரசமிகு ......பசுபதியெனுமொரு-அம்பலத்

ஆதிசோதிவேதநீதி ... ... யருளிறை
சாதிபேதவீரமாதி ... ... யெனுமுறை
அகாமுதலெனவிளங்கு ... ...முயிர்க்குயிரான
பகாவொன்றுவனந்த ... பற்பலசொரூபஞான-அம்பத்

அன்புமிகுந்தவ ... ...ரின்பொடுகண்டிட
துன்பமகன்றபே ... ... ரின்பமதுண்டிட
ஆதியந்தமிலாதசுகோதய பாதிசந்திரசடாதரனாகிய
அத்தியுரியைத்தரித்துச் ... ...சித்தமகிழ்வுற்றபரா
சத்தியொருமித்தசிவசுத்தபரவஸ்துவென்றும்-அம்பலத்*

தேவர்கள்முனிவர்கள் ... ...தேங்கிவருந்திச்சென்று
தேறியரனிடத்தைத் ... தேடிப்பணிந்துநின்று
மூவரறியொணாத ... ... முதல்வனேயெங்களிட
முடியாதவருத்தமதை ... ... முன்வந்தகற்றியிட

காலமிதுவெனவேகருதிய சுரர்துயர்போக்கிக்
கருணையுடன் ... ... *

கடுஞ்சினத்துடன்வந்தவசுரர் ... ...மடியவருடேக்கி
ஆறுபொறிகள் ... ...*

ஆறுமுகவடிவெனச்சரவண ... ... மிசையினிதாக்கி
அவர்வளர ... ... *

ஆங்கணனம்பிகையருளுட ... ... னவ்விடநோக்கி
ஆதரவொடு ... ... *

வந்தவிந்தக்கந்தசுதனென்றுமை-யெடுத்தணைக்கும்பாலன்
மறைக்குமேலன் ... ... *

பிந்திவந்தஅந்தநவவீரரோடு ... சென்றிலகுகோலன்
நலங்கொள்வேலன், ...*

அன்புடன்மகிழ்ந்தெழுந்தரக்கனா- வெகுண்டகுலகாலன்
இலங்குசீலன் .... *

வந்தெதிர்த்தசூரர்களை- விந்தையாய்வளைத்தஜெபசாலன்
விளங்குமூலன் .. ..*

அலங்காரமேமிகுந்த ... ...அவுணனைவாட்டி
அகமகிழ்ந்தடர்ந்த ... ... வெஞ்சூரனைவீட்டி
ஆழ்ந்தசல்கடமேல ... ...மழையுங்கடந்து
சூழ்ந்தமாமரமானவனைத் ... ... தொடர்ந்து
அனந்தகோலவடிவங்களைக் ... கண்டதுண்டமாக்கிச்
சினந்துசேவல்மயிலாக ... வந்தவதைப்பற்றிமிதித்து
அமலஞானசுய ... ... நிமலசோதிமய
விமலவீடுடைய ... ... கமலபாதமருள்

உ

முருகன் துணை.

திருப்போரூர்க்கீர்த்தனை. ௪௧

அம்பரவிண்டலசமரசமான ... ... பிரகாசன்
திறமிகும்... ... ... *
உம்பர்கள்தம்பதிகதிதழையின்ப... ... உல்லாசன்
அறமிகும் ... ... *
அன்பர்களின்புடனுண்டிடுமமுதெனும் ... ஈசன்
அதிகசு-தந்தரகுஞ்சரவிறையருள் ... திருமகள்நேசன்
கயிலையில் ... ... *
ஐமுகன்கரிமுகன்அரிமுகன்சதுர்முகன் புருகுதனிமகரன்
சுடரவனெனவரு ... ...மெய்ஞ்ஞானபோதவதீத
மிகுதவமொருவழிசுயவெளிமேவிய ... ...*
அஞ்ஞானமலதிமிரம்.. அகற்றிடுசற்குணநிர்க்குணனாகிய
யாவராலுந்தேடுதற்குக்... ...காரணனாதபாதபத்ம
மேவுமோனஞானமுற்று ... மேயநிர்த்துவீரமான
தாண்டவன்பரிமள ... ... நீபத்தொடை
பூண்டவன்-பரி ... ... பூரணனன்பொடு
வேண்டியோர்மொழி ... ... புகலுதுமெனவுனி
யாண்டவன்குரு ... ... வாகியெழுந்தருள்
ஆறுமுகவடிவேலர் ... அடியேன்மலமகன்று
அகண்டிதாகாரமெனும் ... அருணிலைதனில்நின்று
வடிவைக்காணவேவேணும்*

முற்றிற்று.